சார்பு நீதிமன்றம், நாகப்பட்டினம்

**O.S. No. 12/2022**

2023 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 21ம் நாள் வியாழக்கிழமை வாதி தரப்பு சாட்சியமாகிய **ரகுராமன் என்கிற ரகுநாதன் PW1** வாக்குமுலம் 1869 ஆம் ஆண்டின் 44 வது சட்ட விதிகளின் படி / ஏற்பாட்டின்படி திரு.கே.சீனிவாசன்,எம்.ஏ.,எல்.எல்.எம்., சார்பு நீதிபதி நாகப்பட்டினம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது /பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| **பெயர்** | **ரகுராமன் என்கிற ரகுநாதன்** | கிராமம் |
| வயது | | தாலுக்கா |
| தகப்பனார் பெயர் | | ஜாதி |
| கணவர் பெயர் | | சமயம் |
| தொழில் | | |

21.12..2023

**முதல் விசாரணை**

நான் எனது முதல் விசாரணை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். இதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். இதில் உள்ளது எனது கையெழுத்துதான். இதனை எனது சாட்சியத்தின் ஒரு பகுதியாக ஏற்றுக்கொள்ள கேட்டுக் கொள்கிறேன். எனது தரப்பில் கீழ்கண்ட ஆவணங்களை குறியீடு செய்ய பிரார்த்திக்கிறேன். 01.09.2020 தேதியிட்ட வாதி பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த பிராமசரி நோட்டு அசல் **வா.சா.ஆ-1** ஆகும். 08.11.2021 தேதியிட்ட வாதி பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் **வா.சா.ஆ.2** ஆகும். வாதி அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை பிரதிவாதி பெற்றுக் கொண்டதற்கதான ஒப்புகை அட்டை அசல் **வா.சா.ஆ.3** ஆகும். 11.11.2021 தேதியிட்ட பிரதிவாதி அனுப்பிய பதிலறிவிப்பு சார்வு நகல் **வா.சா.ஆ.4** ஆகும். 27.05.2016 தேதியிட்ட பிரதிவாதி பெற்ற கிரைய சாசனம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.5** ஆகும். பிரதிவாதி சொத்திற்கான வில்லங்க சான்று கணிணி நகல் **வா.சா.ஆ.6** ஆகும், எனது வழக்கை ஏற்றுக்கொண்டு தாவாப்படி தீர்ப்பாக பிரார்த்திக்கிறேன்.

**குறுக்கு விசாரணை**

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணைக்காய வாய்தா ஒத்தி வைத்து உத்தரவிடப்படுகிறது**).